1969 மார்ச் 22]

Touring Cinema Theatres.

399—*Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Finance be pleased to state :

(*a*) whether the security deposit payable by the touring cinema theatre owners has been increased ; and

(*b*) if so, the reasons thereof ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

பனியன்களுக்கு ஒருமுனை விற்பனை வரி

*400 வினா—**திரு. பி. வேலுசாமி :** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூரில் உற்பத்தியாகும் பனியன்களுக்கு ஒரு முனை விற்பனை வரி விதித்து அத் தொழிலை ஊக்குவிக்கும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இந்த விஷயம் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. பி. வேலுசாமி : ஐயா, திருப்பூரில் மிகக் குறைந்த மூலதனத்தில் அதிகப்படியான ஆட்களுக்கு வேலை கொடுக்கும் பனியன் தொழிலை ஊக்குவிக்க அதற்கு ஒரு முனை விற்பனை வரி விதித்தால் சரியாக இருக்கும் என்பது பலருடைய அபிப்பிராயமாக இருப்பதால், அதை ஏற்றுக்கொள்வதற்கு அரசுக்கு உத்தேசம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இது ஏற்கனவே பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னேன். அது மட்டுமல்லாமல், அவர்கள் வரவு செலவுக் கணக்கு வைத்துக்கொள்வதிலே இருக்கும் சில சிக்கல்களை நீக்கி மொத்தமாக காஸ்ட் அகவுண்ட்ஸ் மட்டும் வைத்துக் கொண்டால்கூடப் போதும் என்று சில விதிமுறை இப்பொழுது மாற்றப்பட்டிருக்கிறது.

Pre-industrial training for repatriates

401—*Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Finance be pleased to state the details of the pre-industrial training course offered to repatriates from other countries ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பர்மாவிலிருந்தும் இலங்கையிலிருந்தும் தாயகம் திரும்பிய சிறுவர்கள் குறைந்த கல்வித் தகுதிகளைப் பெற்றிருந்து, தொழில் பயிற்சிப் பள்ளிகளில் சேர்ந்து பயிற்சி பெற விரும்பினால், அவர்களுக்குப் பயிற்சி அளிப்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும். பயிற்சி பெறும் ஒவ்வொருவருக்கும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 40 பயிற்சி உதவிப் பணம் வழங்கப்படுகிறது. அவர்கள் தங்கள் குடும்பங்களை விட்டுப் பிரிந்து விடுதிகளிலும் பிற உறைவிடங்களிலும் வசித்து வந்தால் தான் அப் பயிற்சி உதவிப் பணத்தைப் பெறுவர். மேலும் அவர்களது பெற்றோர்களின் வருமானம் திங்கள் ஒன்றுக்கு ரூ. 250-க்கு மேற்பட்டிருக்கக் கூடாது. பயிற்சி பெறும் சிறுவர்களின் பெற்றோருடைய வருமானம் திங்கள் ஒன்றுக்கு ரூ. 250-க்கு மேற்படாதிருப்பின், அச் சிறுவர் ஒவ்வொருவருக்கும் பயிற்சி முறை ஒன்றுக்கு ரூ. 30 புத்தக மானியமும் வழங்கப்படும். இப் பயிற்சியின் கால அளவு 3 திங்கள் என்று முதற்கண் முடிவு செய்யப்பட் டிருந்தது. செங்கற்பட்டு மாவட்டம், கும்மிடிபூண்டியில் 2—4—1968 முதல் அது நடத்தப்பட்டது. இத் திட்டத்தைச் செயல்படுத்தும் பொறுப்பு கும்மிடிபூண்டி சிறப்புத் துணைக் கலெக்டரிடம் ஒப்படைக்கப்பட்டது. பன்னிரண்டு மாணவர் பயிற்சி பெற்றனர்.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது : பேரவைத் தலைவர் அவர்களே, பர்மாவிலிருந்தும் இலங்கையிலிருந்தும் அகதிகள் வருகிறபோது, அவர்களுடைய பிள்ளைகள் அங்கே பள்ளிக் கூடத்தில் படித்ததற்குரிய அத்தாட்சி சர்டிபிகேட்டைக் கொண்டுவர முடியவில்லை. அந்த நிலையில் தொழில் பள்ளிகளில் அவர்கள் சேர முடியாத நிலை இருப்பதால், "அகதிகளினுடைய குழந்தை" என்ற அடிப்படையில் அவர்களுக்குக் கல்வித் தகுதி என்ற நிர்ணயம் இருக்கிறதே அதிலிருந்து விதிவிலக்கு அளிக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கல்வித் தகுதி என்ற நிர்ணயம் இல்லை. கல்வி அதிகமாக இல்லாதவர்களுக்கு ஒரு பயிற்சி கொடுப்பதற்காகத்தான் இது ஏற்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகிற குறைபாடுகள் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்படும் போது, அவர்கள் தாராளமாக எடுத்துக்கொள்ளப்பட்டு, மிகப் பரிவு உணர்ச்சியோடு அவர்கள் விஷயம் கவனிக்கப்படுகிறது.

திரு. கே. போஜன் : தலைவர் அவர்களே, இலங்கையிலிருந்து திரும்பி வரும் அகதிகளின் குழந்தைகளுக்கு எந்த எந்தத் துறையில் தொழிற் பயிற்சி அளிக்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அவற்றைப் பற்றிய விவரங்கள் இங்கு இல்லை. பொதுவாக, அவர்கள் இந்தப் பயிற்சிபெறுவதன் மூலமாகச் சிறு தொழில்கள் நடத்துவதற்குவேண்டிய தொழில் நுணுக்கத்தைப் பெற முடிகிறது.

திரு. டி. மார்டின் : தலைவர் அவர்களே, இந்த விதமாகத் தொழிற் பயிற்சி கொடுக்கின்ற நேரத்திலே இலங்கையிலிருந்து வரக்கூடியவர்கள் பலர் பனைமரத் தொழில் செய்யக்கூடியவர்களாக இருக்கிறார்கள். அநேகர் மீன் பிடிக்கும் தொழில் செய்யக் கூடியவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் அங்கிருந்து வரும்போது உதவி செய்வதற்கான திட்டத்தில் பனைமரத் தொழில் செய்யக் கூடியவர்களாக இருந்தால், பனை மரங்களைக் குறைந்த லீசுக்கு அவர்களுக்குக் கொடுத்து உதவியும் அல்லது மீன் பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டவர்களாக இருந்தால் அவர்கள் மீன் பிடிக்கும் தொழில் செய்வதற்கு வேண்டிய போட்டுகளைக்கொடுத்து உதவி செய்ய அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இலங்கையிலிருந்து வந்த அகதிகளுக்கு உதவி செய்வதற்கு நல்ல யோசனையைச் சொல்கிறார்கள். அதனுடைய சாதக பாதகங்களை ஆராய்ந்து பார்க்கலாம்.

திரு. கே. என். குமாரசாமி : பர்மாவிலிருந்து வந்த அகதிகளில் தொழிற்பட்டம் பெற்றவர்கள் யாராவது வந்திருக்கிறார்களா ? அவர்கள் அரசாங்கத்திற்கு மனுப் போட்டு அவர்களுக்கு அரசாங்கம் தொழிலுக்கு உதவி அளித்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அப்படிப்பட்ட தகவல் எதுவும் என்னிடத்தில் இல்லை.

THIRU K. VINAYAKAM : Sir, out of these repatriates who have been given free industrial training, has anybody been absorbed in any employment under any industry or are they left to themselves to seek their own employment or to start their own small-scale industries ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இதுபற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை. 13 பேர்கள் சேர்ந்து இதிலே ஒருவர் நடுவிலே விட்டுவிட்டுச் சென்றுவிட்டார். மற்றபடி விவரம் இல்லை.